| O.S.No. 02/2025 | PW1: திரு. சர்தார் கான்<br>த/பெ. திரு. அசேன் கான் | 07-11-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

1. 1–ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர். 2, 3 பிரதிவாதிகள் 1–ம் பிரதிவாதியின் மனைவி மற்றும் மகன் ஆவார்கள். தாவா சொத்துக்கள் நிலமா வீட்டு மனையா என்றால் நிலமாக இருந்து தற்போது வீட்டு மனையாக மாறிவிட்டது. எனக்கு ஒதுக்கப்பட்ட 10 சென்ட்டினை உட்பிரிவு செய்யப்பட்டதாக என்றால் உட்பிரிவு செய்யப்பட்டு நான்தான் கடந்த 22 வருடமாக அனுபவித்து வருகிறேன், அதன் சர்வே எண். 22 ஆகும். அதன் உட்பிரிவு எண். 22/6H என்றால் சரிதான்.

2. தாவா சொத்தினை தவிர்த்து இதர சொத்துக்களை பொறுத்து 24.01.1997–ல் நானும், எனது சகோதரர்களும் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் 1–ம் பிரதிவாதிக்கு C ஷெட்யூல் சொத்துக்களும், எனக்கு E ஷெட்யூல் சொத்துக்களும் பாகமாக வந்தது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினையில் 1–ம் பிரதிவாதிக்கு 20 சென்ட் நிலமாகவும், எனக்கு 10 சென்ட் நிலமாகவும் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான்.

3. வழக்கு சொத்தை தவிர்த்து மேலும் சில சொத்துக்களை நானும், எனது சகோதரரும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் வீடு உள்ளது என்பதற்கு ஆதாரமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சர்வே எண். 22/6H–க்கு வடக்கு பக்கத்தில் 1–ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட 20 சென்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். மற்ற சகோதரர்களுக்கும் அடுத்து அடுத்து வடக்கு பக்கத்தில் சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கு கிழக்கு பக்கம் மந்தைவெளி உள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் கிழக்கு பக்கம் என்ன ஜக்குபந்தி குறிப்பிட்டு எழுதியுள்ளீர்கள் என்றால் ரோடு என்று எழுதியுள்ளோம். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு ஒதுக்கப்பட்ட E ஷெட்யூல் சொத்திற்கு கிழக்கு பக்கம் மந்தைவெளி என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மந்தைவெளிக்கு ஒட்டினார்போல் கிழக்கு பக்கம் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்களின் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அந்த வீடுகளுக்கு வழியானது அழிஞ்சல்பட்டு தார்சாலை என்று சொன்னால் சரிதான்.

5. எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கு பின்புறம் எங்களுக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். அந்த பூர்வீக சொத்து 2 ஏக்கர் 60 சென்ட் ஆகும். அந்த சொத்தினை பிரிப்பதற்கு நானும், எனது சகோரர்களும் நடவடிக்கை எடுத்தோம் என்று சொன்னால் சரிதான். நாங்கள் வீட்டு மனை பிரிவுகளாக பிரிப்பதற்கு எனக்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் வழியாக சாலை அமைப்பதற்காக நாங்கள் முடிவு செய்திருந்தோம் என்றால் சரியல்ல.

6. எனக்கு ஒதுக்கப்பட்ட 10 சென்ட்டிற்கு அருகே என் மகள் பெயரில் 3 ½ சென்ட் இடம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான், அந்த இடத்தை என் மகள் வாங்கினார். நான் அழிஞ்சல்பட்டு கிராம சாலையின் பக்கத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அதேபோல் 1-ம் பிரதிவாதி என்னுடைய வீட்டிற்கு எதிர்புறமாக தள்ளி வசிக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் சிமெண்ட்டால் ஆன சீட்டு போட்டு வீடு கட்டியுள்ளேன் என்று

சொல்லியுள்ளதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா சொத்தினை அளப்பதற்கு மனு போட்டேன், அளந்த தேதி ஞாபகமில்லை. 2024-ம் வருடம் மே மாதம் சர்வேயர் சொத்தினை அளந்தார் என்றாலும், அதில் நாங்கள் கையெழுத்து போட்டோம் என்றாலும் சரியல்ல, சொத்தினை அளந்தது உண்மை, ஆனால் நாங்கள் கையெழுத்து போடவில்லை. சர்வேயர் அளந்து காண்பித்தபோது என்னுடைய இடத்தில் வீடு இல்லை என்று குறிப்பிட்டு காண்பித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

7. 1-ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட 20 சென்ட்டில் சிமெண்ட்டால் ஆன வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றாலும், அதற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, நான்தான் வீடு கட்டியுள்ளேன், அவர் கட்டவில்லை. சிப்காட்டில் நிலம் கையகப்படுத்தும்போது நிலம் கையகப்படுத்திய அனைவருக்கும் வீட்டு மனை ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1-ம் பிரதிவாதிக்கு உலக அறிவு தெரியாது என்றாலும், வழக்கு சொத்தினை அவரிடமிருந்து அபகரிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் பொய்யான சங்கதிகளைக் கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வேயர் அளந்த உடனே நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை, காலம் கடந்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா இடத்தில் வீடு உள்ளதா இல்லையா என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆணையர் நியமனம் செய்து அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.11.07 12:13:27 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**